| O.S.No. 410/2019 | PW1 : திரு. விஜயன் (எ) விநாயகம்<br>த/பெ. திரு. மாணிக்கம் | 24-01-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்கிறேன். 4–ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய தந்தை மாணிக்கம் 1998–ல் காலமானார். என் தந்தை மாணிக்கத்திற்கு 4 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் ஆகும். அவர்கள் பெயர், விநாயகம் ஆகிய நான், பச்சையம்மாள், கோபாலகிருஷ்ணன், 1–ம் பிரதிவாதி வேலு, 2–ம் பிரதிவாதி சங்கர், ரமணி ஆகும். அதில் கோபாலகிருஷ்ணன் காலமாகிவிட்டார், மற்ற அனைவரும் உயிருடன் உள்ளோம்.

2. நான் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகளை தவிர ஏன் மற்ற நபர்ளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, அதனால் சேர்க்கவில்லை. என் தந்தையின் வாரிசு சான்றிதழை வாங்கியுள்ளீர்களா என்றால் இல்லை. எனக்கு 1974–ம் ஆண்டு திருமணம் நடந்தது. 1–ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று ஞாபகமில்லை. 2–ம் பிரதிவாதிக்கு 2000–ம் ஆண்டு திருமணமானது.

3. திருமணமானதற்கு பிறகு நான் எனது சகோதர சகோதரிகள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். தற்போது நான் அதே ஊரில் பக்கத்து தெருவில் 2001–ம் ஆண்டு வேறு இடம் வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். 1, 2 பிரதிவாதிகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் அவர்கள் பழைய வீட்டில் வசிக்கிறார்கள்.

4. பழைய வீட்டில் எனக்கும் ஒரு பாகம் விடப்பட்டு அதில் நான் மாடுகளை கட்டி பயன்படுத்தி வருகிறேன். சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் தலைவரை வைத்து பஞ்சாயத்து நடத்தினார்கள், அதில் நிலத்திற்கு மதிப்பு போட்டு நான் ரூ.30,000/- பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த பணம் கொடுக்கலானது ஆச்சாரத்திற்கு வராமல் நின்றுவிட்டது.

5. எந்த சொத்துக்களுக்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அதன் சர்வே எண்கள் தெரியாது. வழக்கு 1-ஆவது அயிட்ட சொத்தில் குறிப்பிட்டு இரண்டு அயிட்டங்கள் என் தந்தை மாணிக்கம் தனிமையில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா 2-ஆவது அயிட்ட சொத்தானது 1, 2 பிரதிவாதிகள் தனிமையில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் இல்லை, ஒன்றாக சேர்ந்து வாங்கியதுதான். தாவா 3-ஆவது அயிட்ட சொத்தான பொது வீடு என் தந்தை பேரில்தான் பட்டா உள்ளது என்றால் இல்லை, அனைவர் பெயரிலும் பட்டா உள்ளது. தாவா 4-ஆவது அயிட்ட சொத்தானது எனது தந்தை பெயரில் பட்டா உள்ளது என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை.

6. தாவா பிராதில் 11-வது பத்தியில் 5-ஆவது அயிட்ட சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தந்தைக்கு பாத்தியமான சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்து என்றாலும், ஆனால் சொத்து விவரத்தில் 5-ஆவது அயிட்ட சொத்து காட்டப்படவில்லை என்றால் சரிதான். 5-ஆவது அயிட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான்

புதிதாக வீடு கட்டி குடியிருக்கும் இடம்தான் 5-ஆவது அயிட்ட சொத்து என்றால் சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விவசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**